சுப்பிரமணிய சுவாமி துணை

## ஆறுபடை வீடெடுத்த

# முருகன்

## பக்திப் பாடல்கள்.




—ஆக்கம்—

மு.காசுபதி

2ம் வட்டாரம் கோட்டைக்கல்லாறு.



# அறுமுகனின் அடியார்க்கு அடியேன் உரை

**வெண்பா**

ஆனை முகனே அரனார் திருமகனே
கானமயில் வேலவர் மேற் காசினியில் —யானடியேன்
பக்தியுடன் பாடப் பாலனென்மேல் அன்புவைத்து
குற்றங்களைந் தருள்செய் குஞ்சரமே.

பன்னிருகையானின் பக்தி பூண்ட அன்பர்களே!

அன்பர்க்கன்பன் அறுமுகன் மீது கொண்ட அளவற்ற காதலால் என்புதோல் போர்த்த எழியேன் இவ்விசை மாலையைப் பாடி உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

குற்றமும் குறையும் கற்றவர் கண்ணுக்கு மண்ணிலும் சிறிய தூசாகத் தெரியுமே தவிர மலையாகத் தெரியாதென்ற துணிவுகொண்டு இதனை அச்சிடுவித்து வெளிக்கொணர்ந்தேன்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும் எனும் ஆசையுடன் சமர்ப்பிக்குமிந்நூலை நீங்கள் ஆதரவுடன் ஏற்கவும் அறுமுகனின் அருளைப் பெறவும் வேண்டுகிறேன்.

கோட்டைக் கல்லாறு
2ம் குறிச்சி

மு. காசுபதி

சுப்பிரமணிய சுவாமி துணை

## ஆறுபடை வீடெடுத்த

# முருகன்

## பக்திப் பாடல்கள்.




M. SATKUNAM. B. A. (HONS)

—ஆக்கம்—

மு.காசுபதி

௨ம் வட்டாரம் கோட்டைக்கல்லாறு.

...24.5.65...

அச்சிட்டது;-
மனோகரா அச்சகம் தேற்றாத்தீவு.

சுப்பிரமணிய சுவாமி துணை

# ஆறு படை வீடெடுத்த
# முருகன் பக்திப் பாடல்கள்.

## முருகன் விருத்தம்

1. அறுமுகனே குருபரனே முருகா உன்மேல்
அடியேன் உன் தாள் பணிந்து அன்பாய்ப் பாட
குருவாக நீ இருந்து எந்தன் நாவில்
குறைகளொன்றும் வாராமலுதவி செய்து
அறியாத பாலனென் மேல் அன்பு வைத்து
அப்பனே உமதடியை அடியேன் வாழ்த்த
மயிலேறும் வடிவேலா மனம் உவந்து
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடி வேலோனே

2. ஆறுமுகம் ஆறிருகை கடம்புந் தோழும்
அடிய வரை ஆதரிக்கும் வேலு மேந்தி
கூறரிய அசுரர் குலம் வேரறுத்துக்
குவலயத்தோர் தமைக்கார்த்த குமர வேழே
வேறுதுணை உன்னையல்லால் யாரும் காணேன்
விமலனருள் புத்திரனே முருகா ஐயா
மாயவனுர் மருகோனே அடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

3. இச் செகத்தில் அடியேன் நான் உன்னைப் போற்ற
இரு வினையின் தோடறுக்கும் வழியுங் காட்டி
முற் சென்மமதிலென் சதி செய்தாலும்
முருகோனே மனம் பொறுத்து மூடன் மீதில்
பட்சம் வைத்தருள் கூர்ந்து ரெட்சி ஐயா
பார்பதியாள் தன் பாலா பழனி வேலா
வித்தகனே மானிலத்திலடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றிவைப்பாய் வடிவேலோனே.

4. ஈராறு கரமுடைய அரசே வா வா
ஈஸ்பரனார் ஈன்றெடுத்த துரையே வா வா
கூறு மடியார்கள் வினை தீர்க்க வா வா
குன்றுருவ வேல் விடுத்த குமரா வா வா
மாறுத அசுரர் படை வேரறுத்த
மயிலேறும் சுப்பிரமணியா வாருமையா
பார்மீதில் வேலவனே அடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

5. உற்ற துணை உம்மையல்லால் வேறு தெய்வம்
உலக மதில் வேறுளதோ உமையாள் பாலா
கற்றறியா மூடனென் மேல் கருணை கூர்ந்து
கவலை தனை மாற்றி வைப்பாய் கதிர வேலா
மற் பொருது மிரு வினைகள் வந்து என்னை
வாட்டாது உதவி செய்வாய் வள்ளி வாழ்வே
கர்த்தனருள் புத்திரனே அடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

6. ஊது குழல் மாயவனார் மருகா ஐயா
உலக மதில் உன்னை நம்பிப் பாவி யானும்
தாயிழந்த கன்றது போல் தவித்து நின்றேன்
தற்பரனே வந்தெனது துயரம் தீராய்
சேயான ஏழையெந்தன் துயரம் தீர்க்கத்
தென் கதிரை வேலவனே சித்தம் வைத்தும்
மாயவனார் மருகோனே அடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

7. எருதேறு மீஸ்பரனாரீன் றெடுத்த
கதிர் வேலா காத்தருளைத் தாருமையா
வருவாய் நீ வள்ளி தெய்வானையோடு
வந்தெனது மனக்கவலை மாற்றி வைப்பாய்
குருவாக உன்னை நம்பிக் குவலயத்தில்
குழந்தை மிக வாடுகின்றேன் குமர வேளே
வருவாய் நீ மயிலேறி அடியேன் கொண்ட
மனக்கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

8. ஏறுமயில் வாகனனே அரனார் மைந்தா
ஏழுலகை அரைநொடியில் வலமாய்வந்தாய்
பாருலகில் பழனி மலை மீதில் மேவிப்
பண்புடனே உபதேசம் பரனுக்கீந்தாய்
நான்முகத்துப் பிரமனைத்தான் சிறையில் வைத்தாய்
நாரியுமை பாலகனே நாடி நின்றேன்
மானிலத்தில் வேலவனே அடியேன் கொண்ட
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

9. ஐயென்றும் கிலியென்றும் யகாரமென்றும்
அரி அரி ஓம் திரிபுவன மாகி நின்றும்
பையரவ மணிந்த சிவனீன்றெடுத்த
பாலனென்றும் பரன் கிரியில் மேவினின்றும்
கையதனில் வேலேந்தி மயில் மீதேறி
கன்னியர்களிரு புறமும் கவரி வீச
ஐயனே! மானிலத்தில் அடியேன் கொண்ட
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

10 ஒப்பிலா மணி விளக்கே இமையாள் பாலா
உம்பர் முதல் கிம்புருடர் உம்மைப் பெற்ற
செப்பமுடன் தவில் வீணை வாத்தியங்கள்
செய செயவென்று பலதிக்கும் ஆற்பரிக்க
கற்பூர ஆலாத்தி கன்னிமார்கள்
கவரி முதல் அரிவையர்கள் வீசி நிற்க
பக்தர் தொழும் கதிர் வேலா அடியேன் கொண்ட
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

11. ஓமென்றும் பிரணவமே உருவமாகி
உண்மையுறு முக்கோணம் தன்னில் நின்று
தாமதங்கள் செய்யாமல் எனைக்காக்கச்
சண்முகனே இது சமயம் வாருமையா
ஆனை முக ஐங்கரனுக் கிளைய கோவே
அறு முகனே என் கவலை தீருமையா
மானிலத்தில் வேலவனே அடியேன் கொண்ட
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

12. ஔவியே பூதமென்னைப் பிடியா வண்ணம்
அடியவனை ஆதரித்து உன்னருளைத் தராய்
கௌரியின் முலை அருந்திக் கங்கை மேவி
கருதரிய சரவணையில் வளர்ந்த நீதா
மௌரியமாய் மலரடியை அடியேன் வாழ்த்த
மயிலேறும் வடிவேலா மனமுவந்து
சௌரியமாய் வேலவனே அடியேன் கொண்ட
மனக் கவலை மாற்றி வைப்பாய் வடிவேலோனே.

13. இக்கணமே இது நல்ல வேளையையா
என் கவலை தீர்த்தருள வாருமையா
முக்கணனூர் ஈன்றெடுத்த முதல்வா ஐயா
மூடனெந்தன் மனக்கவலை தீருமையா
பக்கமதில் எனக்கொருவர் துணையுமில்லை
பழனிமலை வேலவனே பணிந்தேனுன்னை
எக்குறைகள் என் பிழைகள் இருந்தாலுந்தான்
சுவாமி ஏழையென் மேல் அன்பு வைத்து இரட்சிப்
[ பாயே ]

## ஆனைமுகன் சோதரா!

கண்ணிலே இருப்பதென்ன............(என்ற மெட்டு)

14. ஆனை முகன் சோதரனே எங்கள் முருகோனே
ஆடுமயில் வாகனனே தங்க வடிவேலா
கான வள்ளி நாயகனே எங்கள் முருகோனே
கணபதியின் சோதரனே தங்க வடி வேலா
பார்பதி பாலகனே—எங்கள் முருகோனே – எங்கள் முரு
பச்சை மயில் வாகனனே தங்கவடிவேலா
தேவர் சேனாதிபதியே எங்கள் முருகோனே
தென்கதிரை வேல்முருகா தங்கவடிவேலா
அசுரரை வதைத்தவனே எங்கள் முருகோனே எ
அமரர் சிறை மீட்டவனே தங்கவடிவேலா

— ★ —

## பணிந்தேன் அருள்தாராய்

போனால் போகட்டும் போடா...... [என்ற மெட்டு]

காவடி வேல் முருகோனே உந்தன்
கழலடி பணிவோர்க்கருள் புரிவோனே (காவடி)
திருமறைப் பொருளே அறுமுகக் குருவே
தென் பழனி மலை உறைவோனே.

தேவர்கள் தலைவா மூவர்கள் முதல்வா
தென்பரங்கிரியில் உறை வேலா
தேன் மொழி வள்ளியின் மணவாளா —எங்கள்
சிவனுமை புதல்வா குணசீலா —உந்தன்
சேவடி பணிந்தேனருள் தாராய் —(காவடி வேல்முரு)

காலனை உதைத்தவன் பாலனே முருகா
கதிர மலையிலொளி வீசும் சோதியே சுடரே
சுர - சங்கரா துயரமகற்றியெனையாள் வாய்
ஆதி விநயகற் கிளையோனே —எங்கள்
ஆறு மாமுக வேலவனே —இந்த
அவனியில் விழங்கும் மெய்ப்பொருளே. —(காவடி)

பக்தர்கள் போற்றச் சித்தர்கள் வாழ்த்த
பாலரெல்லாமிசை பாட
பாங்குடன் கவரி அரிவையர் வீசப்
பச்சை மயில் மிசை வருவோனே
பாவை தெய்வானையின் மணவாளா —உந்தன்
பதமலர் பணிந்தேன் வடிவேலா —எனைக்
காத்தருள் புரிவாய் உமைபாலா —(காவடி வேல்)

— ▣ —

## வேலவனே வா வா

கண்டதுண்டோ கலியுகத்தில்...... [என்ற மெட்டு]

அறுமுகனே குருபரனே வரமருள வா
சரவணையிலரித்த சண்முகனே

கதிரை மலை வேலவனே கார்த்தருள வா
கனக வள்ளி நாயகனே கந்தனே நீ வா
தெய்வானை நாயகனே தேவனே நீ வா
தென்பரங்கிரி வேலவனே செல்வனே நீ வா

— தொகையறு —

சரவணப் பொய்கையில் அறுமுகப் பொறியதாய்
தானவதரித்த முருகா!
சக்தி உமை பாலனே தத்து மயில் வீரனே சக்தி
வடி வேல் முருகனே

அமரர் சிறை மீட்டவனே அறுமுகனே வா
அடியாரிதையத் திருப்பவனே என்ஐயனே நீ வா
குருபரனே குறையகற்றி வறுமையைத் தீராய்
குகனே குகனே உன்னடியினை தாராய்.

## சண்முகத்தரசே அருள் தருக

பிரிந்தா வனமும் நந்த குமாரனும்......[என்ற மெட்டு]

அரி ஓம் பிரணவமாகிய புதல்வா
அடியார் தமைக் கார்த்தருள் தாராய்
ஆனந்தத் தாண்டவமாடி நின்றாய் தில்லை
அம்பல வாணா அருள் தாராய் —அரி

உகந்தையம்பதி தனில் உன்னொளி நினைத்தால்
உள்ளமே மகிழ்ந்து கூத்தாடாதா
உன்னருள் புரிவாய் பன்னிரு கரனே
உண்மைப் பொருளே அருள்தாராய் —அரி

குருபர முருகா குமர குருபரா
குக்குடத்து வாசா அருள் தாராய்
சரபண பவ குக குமர குரு பர
சண் முகத்தரசே அருள் தாராய். —அரி

# காத்தருள்வாய் வேல்முருகா

மணப்பாற மாடுகட்டி..........(என்ற மெட்டு)

மாடேறு மீசரீன்ற மயிலேறும் வேலவனே
மலர்ப் பதத்தைப் போற்றி செய்தேன் வேல்முருகா
உன் மனது வைத்துக் காத்தருள்வாய் வேல் முருகா

ஆடாதஆட்டமெல்லாம் ஆட்டிவைத்தாய்ஏழை என்னை
ஆடி ஆடி ஓடி வந்தேன் வேல் முருகா
என்னை ஆதரித்துக் காருமையா வேல் முருகா

அம்பிகையின் பாலகனே தும்பிமுகன் சோதரனே
நம்பினேரை ஆதரிக்கும் வேல் முருகா.
எனை அன்பு வைத்துக் காத்தருள்வாய் வேல் முருகா

மானிலத்திலே பிறந்து மாயையிலே அலைந்து
மனது நொந்து வாடுகிறேன் வேல் முருகா
உந்தன் மனது வைத்து காத்தருள்வாய் வேல் முருகா

கோதையுமை பாலகனே கோழிக் கொடி வேலவனே
கோல மயில் மீதிலேறி வேல் முருகா
எந்தன் குறையகற்றிக் காருமையா வேல் முருகா



## வடிவேலெடுத்த குமரா

வாராயென் தோழி வாராயோ...... .. ( என்ற மெட்டு
வாராயோ வேலா வாராயோ
மயில் மீதிலேறி வாராயோ
மலை மீதில் மேவும் குகனே—எந்தன்
மிடி தீர்க்க ஓடி வாராயோ —வாராயோ வேலா
வடி வேலெடுத்த குமரா
மண்டூர்ப் பதிமீதமர்ந்த முருகா
தினைப் புனம மீதிற் சென்ற வடிவேல்
வள்ளி தனைப் பாகம் வைத்த திருவே
துதித் தாடிப்பாடி மகிழ்ந்தேனே
துயர் தீர்க்க வேண்டிப் பணிந்தேன். — வாராயோ
மலை மேவும் தேவி பாலா
பக்தருள மேவு மாதி லோலா
மறை மேவு மாதி லோலா புள்ளி
மயிலேறு சோதி வேலா
மனமார வாழ்த்திப் புகழ்ந்தேனே—உந்தன்
மலர்ப் பாதம் வேண்டி மகிழ்ந்தேனே — வாராயோ

## அன்பர்கள் இதயத்தில் ....

மேனி சிலிர்க்குதையா........ [ என்ற மெட்டு ]
காவடி யாடுதையா ஞானக் கந்தனே
உந்தனை வந்தனை செய்துமே — காவ
பாவலர் பாவிசை பாடுகிறார் இங்கே
பக்தர்கள் பாமாலை சூடுகிறார்
தேவடியாள் மகன் அருணகிரி புகழ்
செப்பிட அருளிய முக்கணன் புதல்வனே —காவ
அறு படை வீட்டினில் அமர்ந்திருப்பாய் வரும்
அன்பர்கள் இதயத்தில் மகிழ்ந் திருப்பாய்
பெருமை சேர் கதிரயம் பதிதனில் மேவிய
பேரொளியே வடிவேல் முருகா மணம் காவடியாடு

— சுபம் —




அச்சிட்டது;-

மனோகரா அச்சகம்

தேற்றாத்தீவு களுவாஞ்சிகுடி